# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 85/2012** **Date:15.04.2026.**

**(PW1)- கணேசன்**

<u>**பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. வா.சா.ஆ.6 ஆவணப்படி பேட்ரிக்சூலியனுக்கு கிடைத்த சொத்து மற்றும் எனது சகோதரர் செல்லப்பா விற்பனை செய்த வா.சா.ஆ. 3 ஆவணப்படி பேட்ரிக்சூலியனுக்கும் விஜயகுமாருக்கும் கிடைத்த ஒரு செண்ட் சொத்தையும் சேர்த்து அன்பம்மாள் என்பவருக்கு 17.12.2004 ல் ஆவண எண் 1959/2004 பதிவு செய்யப்பட்ட கிரய ஆவணம் கிரயம் கொடுத்தனர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படம் ஆவணம் தான் மேற்படி ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் குறிப்பிடும் பாதை எவ்வளவு அளவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 17 அடி அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் பாதையின் அளவை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் பாதையின் அகலம் 4.5 மீட்டர் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு 14.75 அடி அகலம் உள்ள பாதையை நான் எனது பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் 17 அடி என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, ஆவணங்களில் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் மேற்படி பாதையின் அகலம் 17 அடி என்று எங்கும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

3. மேலும் பேட்ரிக்சூலியன் மற்றும் விஜயகுமார் அன்பம்மாளுக்கு என்னிடம் காட்டப்படும் ஆவணப்படி 75 செண்ட் 110 சதுர லிங்ஸ் சொத்து கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி**.**வா**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணப்படி அன்பம்மாள் கிரயம் பெற்ற பின்பு மேற்படி 75 செண்ட் 110 சதுர லிங்ஸ் சொத்தை 7 கண்டங்களாக பிரித்தார் என்றால் சரிதான். மேற்படி 7 கண்டங்களுக்கும் போக்குவரத்து செய்ய பாதை மேற்படி 75 செண்ட் சொத்தில் வடக்கு ஓரத்தில் ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். மேற்படி செல்லப்பன் கிரயம் கொடுத்த 1 செண்ட் பாதையில் 12 அடி பாதை உடன் சேரும்

என்றால் சரிதான்.

4. மேற்படி 7 கண்டங்களில் 2 வது கண்டத்தை நான் அன்பம்மாளிடம் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற மறுதினம் 1 வது கண்டத்தை விஜயபாலா கிரயம் பெற்றார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணப்படி விஜயபாலா 14 செண்ட் 580 சதுர லிங்ஸ் சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணச் சொத்திற்கு நான்கு பக்க அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கிழக்கே 4.70, 10.5,7.90 என்று மொத்தம் 23.15 மீட்டர் நீள அளவு உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கிழக்கு எல்கையாக நான் கிரயம் பெற்றுள்ள 4 லிங்ஸ் பாதையை எனது மனை என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.

5. வடக்கு எல்கையாக மொத்த சொத்திற்கான 12 அடி பாதை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கு எல்கையாக எனக்கு கிடைத்த 3 வது கண்ட சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கே நான் கிரயம் பெற்றுள்ள 2 கண்ட சொத்தை காட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். விஜயபாலா கிரயம் பெற்ற சொத்தை 2 கண்டங்களாக பிரித்து அதில் ஒரு கிழக்கே உள்ள ஒரு கண்டத்தை ஜெயராஜன் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கிரய ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஜெயராஜன் அவருக்கு கிடைத்த சொத்தை வா.சா.ஆ.7 படி 1 ஆம் வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

6. 1 ஆம் வாதி கிடைத்த சொத்தை வர்கீஸ் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றாலும் என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கிரய ஆவணம் என்றாலும் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஜெயராஜன் கிரயம் பெற்ற கண்டத்திற்கு மேற்கே உள்ள கண்டத்தை ஜெயசீலன் விஜய்ஆனந்து என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளர் என்றால் சரிதான். மேற்கூறியவாறு 1 ஆம் வாதி மற்றும் 4 ஆம் வாதி உரிமை பெற்ற சொத்தை விற்பனை செய்துவிட்டார்கள் என்றாலும் தற்போது அவர்களிடம் சொத்தை பொறுத்து எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி 7 கண்டங்களுக்கு பாதையாக விடப்பட்ட 12 அடி அகல பாதை ஸ்தலத்தையும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரயம் பெற்ற சொத்தையும் விற்பனை செய்யாமல் அன்பம்மாள் தனது கைவசத்தில் வைத்துள்ளார்

என்றால் சரிதான்.

7. மேற்படி பாதையின் முழு உரிமையாளரான அன்பம்மாளை நான் வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேலும் என்னை தவிர்த்து மேலே குறிப்பிட்ட கிரயம் பெற்ற நபர்களை நான் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு அவசிய கட்சிகாரர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் எனது வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் குறிப்பிடுவது போல் பேட்ரிக்சூலியன் மற்றும் விஜயகுமார் மீன் வலை கம்பெனி நடத்திவந்தார்கள் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் வழிபாதைக்காக தான் ஒரு செண்ட் சொத்தை கிரயம் பெற்றனர்.

8. மேற்படி சொத்தை வழிப்பாதைக்காக கிரயம் பெற்ற விபரம் வா.சா.ஆ.3 ஆவணத்திலோ அல்லது வா.சா.ஆ.6 ஆவணத்திலோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.ஏ பட்டிகை சொத்தில் 12 அடி பாதை அமைப்பதற்கு முன்பு நான் குறிப்பிடுவது போல் வா.சா.ஆ.3,6 ஆவணப்படி கொடுத்த சொத்துக்கள் மின் வலை கம்பெனிக்கு பாதையாக பயன்படுத்தி வந்தது என்றால் சரிதான். அவ்வாறு 12 அடி பாதை வருவதற்கு முன்பு செல்லப்பன் கிரயம் கொடுத்த 1 செண்ட் சொத்து வழியாக ஏ பட்டிகை சொத்துக்குள் பிரவேசிக்கலாம் என்றால் சரியல்ல. செல்லப்பன் கிரயம் கொடுத்த 1 செண்ட் சொத்தின் வடக்கு எல்கையும் ஏ பட்டிகை சொத்தின் தென்கிழக்கு எல்கையும் ஒரே எல்கை தான் என்றாலும் அதன் வழியாக ஏ பட்டிகை சொதிற்குள் பிரவேசிக்கலாம் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஏ பட்டிகை சொத்தில் மீன் வலை கம்பெனி நடந்து வந்ததாக குறிப்பிடும் காலத்தில் எனக்கு பாகப்பத்திரம் மூலம் கிடைத்த மூன்றாவது கண்டத்திற்கு நான் கிரயம் பெற்ற 4 லிங்ஸ் பாதை வழியாக சென்று வந்தேன் என்றால் சரிதான்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**